1994 மார்ச் 25]

அமைக்கப்பட்டு இருக்கிறது. அறிக்கை பெறப்பட்டவுடன், அரசு எடுக்கும் முடிவின் அடிப்படையில், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *97*, திரு. ஆர்.டி. அரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

97 –

விருத்தாசலத்தில் ஓர் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்தல்

** 20529–திரு. ஆர். டி. அரங்கநாதன்:*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறபோது, தற்போது விருத்தாசலம் கோட்டத்தில் உள்ள சங்கராபுரம் வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி கோட்டத்திற்குச் சென்றுவிடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விருத்தாசலம் கோட்டத்திற்காக விருத்தாசலத்தில் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ.எம் பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு விருத்தாசலம் கோட்டத்தில் இருந்த சங்கராபுரம் வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரம் - ராமசாமி படையாச்சியார் மாவட்டத்தின் தலைநகரமான விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) விருத்தாசலத்தில் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் தற்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டு வேலைப்பளுவைக் குறைக்கக்கூடிய அளவிலே, மக்களின் அன்றாடத் தேவைகளை எளிதில் செய்வதற்காகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் மாவட்டம் ஒன்றாக இருந்தபோது, சங்கராபுரத்தில் இருந்த வேலைவாய்ப்பு அலுவலகம் தற்போது விழுப்புரம்–ராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலே இருக்கிற

காரணத்தால், எங்கள் தொகுதியாகிய விருத்தாசலம் பகுதியை மையமாகக் கொண்டு அமைத்தால், அருகாமையில் இருக்கிற சிதம்பரம், காட்டுமன்னார்குடி, புவனகிரி, விருத்தாசலம், மங்களூர் ஆகிய ஐந்து தொகுதிகளுக்கும் நடு மையமாக இருக்கிற அந்த விருத்தாசலம் பகுதியிலே வள்ளலார் மாவட்டத்தின் வேலைவாய்ப்பு அலுவலகத்தை அமைத்துத் தந்தால், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற வேலையற்ற பட்டதாரிகள், தங்கள் பெயர்களை அங்கே பதிவு செய்து வேலை வாய்ப்பைப் பெற முடியும். இப்போது சுமார் 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மாவட்டத் தலைநகரமான கடலூருக்குச் சென்று அங்குள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்யவேண்டியிருக்கிற காரணத்தால், இதை விருத்தாசலம் பகுதியில் அமைத்துத் தந்தால், அந்தப் பகுதிகளில் இருக்கிற ஏழை எளிய பட்டதாரிகளுக்கு பதிவு செய்ய எளிமையாக இருக்கும். எனவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தென்னாற்காடு - வள்ளலார் மாவட்டம் மற்றும் விழுப்புரம்–ராமசாமி படையாட்சியார் மாவட்டம் என்று இரண்டு மாவட்டங்கள், மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் 30-9-1993–ல் துவங்கப்பட்டு, இன்றைய தினம் அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. தென்னாற்காடு - வள்ளலார் மாவட்டம், கடலூரை மையமாகக் கொண்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோல விழுப்புரம் - ராமசாமி படையாட்சியார் மாவட்டத்தின் தலைநகரமான விழுப்புரத்தை மையமாகக் கொண்டு அந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, விருத்தாசலத்திற்கு என்று தனி வேலைவாய்ப்பு அலுவலகம் துவங்கும் பரிசீலனை அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தில் வேலைப் பளுவை குறைக்க மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட சூழ்நிலையில், வள்ளலார் மாவட்டத்தில் ஏற்கெனவே மாவட்டம் ஒன்றாக இருந்தபோது, இரண்டு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் அங்கே இயங்கி வந்தன. தற்போது அந்த சங்கராபுரம் வேலைவாய்ப்பு அலுவலகம் விழுப்புரம் மாவட்டத்திற்கு போய்விட்டதாலும், வள்ளலார் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் கடலூரில் இயங்கி வருவதாலும், கடலூர் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வேலைப் பளுவை குறைக்கின்ற வகையில் அங்கே

1994 மார்ச் 25]

விருத்தாசலம் பகுதியிலும் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகத்தை ஏற்படுத்தித் தந்தால் அந்தப் பகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக ஏற்படுகின்ற வேலைப்பளுவைக் குறைப்பதற்கும், பட்டதாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் எளிய முறையிலே நல்லதொரு வகையிலே பதிவு செய்து வேலைவாய்ப்பைப் பெற வாய்ப்பாக அமையும். எனவே, இதை விருத்தாசலத்திலே அமைத்துத் தர மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிலாவது பரிசீலித்து ஆவன செய்ய முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11.05*

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் இருக்கும்போது, கோட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகத்தை ஏற்படுத்த இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இதயதெய்வம், கண்கண்ட தெய்வம், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சங்கராபுரத்தைத் தனித் தாலுகாவாக ஆக்கினார்கள். அதே நேரத்தில், அங்கிருந்த வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. கல்வராயன் மலைவாழ் மக்கள், படித்த இளைஞர்கள், வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று பதிவு செய்வதற்கு வசதியாக இருந்த சங்கராபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்தை, சங்கராபுரத்தை தனித் தாலுகாவாக மாற்றிய இதயதெய்வம் அவர்கள், மீண்டும் சங்கராபுரத்திலேயே அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தின் தலைநகரமான விழுப்புரத்தை மையமாகக் கொண்டு, சங்கராபுரம் மற்றும் அனைத்து தாலுக்காக்களும் இருப்பதால், விழுப்புரத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தை அவர்கள் தொடர்புகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, திரு. எம்.கே. பாலன், இருக்கையில் இல்லை.

வினா எண் 99, திரு. ஜி. காளன், இருக்கையில் இல்லை, திரு. உ. பலராமன் கேட்பதாகச் சொல்கிறார்; திரு. உ. பலராமன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.